**BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL**

An international open access, peer- reviewed, refereed journal

# இராவணகாவியத்தில் கல்வி
# Ravana kaaviyaththil kalvi

**ஆய்வாளர் : ஆ.ஹரிதாபேபி**

முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி - 626 123, தமிழ்நாடு, இந்தியா

**நெறியாளர் : முனைவர் ச.தனலெட்சுமி**

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி – 626 123, தமிழ்நாடு, இந்தியா

**Researcher: A. Harithababy**
PhD Researcher, The Standard Fireworks Rajaratnam College for Women (A), Sivakasi - 626 123.
Email address: harithababy-phdtam@sfrcollege.edu.in , ORCID ID: 0009-0003-6247-8069

**Supervisor: Dr. S. Dhanalakshmi**
Assistant Professor, Postgraduate and Research Department of Tamil, The Standard Fireworks Rajaratnam College for Women, Sivakasi – 626 123, ORCID ID: 0000-0003-3511-2865.

**Abstract**

Ravana Kaviyam is an epic composed in adherence to ancient Tamil literary traditions. Based on the Ramayana narrative, this epic casts Ravana as the protagonist to highlight the cultural excellence of the Tamils and the individual greatness of Ravana. Education is the most fundamental aspect of human life; it serves as the foundational factor for all people to lead a meaningful and prosperous existence. This epic emphasizes that discipline is the very basis of education for any learner. It asserts that the wealth of knowledge is far superior to material wealth, serving as a steadfast companion across the three realms of time (past, present, and future).

Furthermore, the text posits that education is an inexhaustible and permanent treasure. It possesses a unique nature where the learner finds joy, and those who listen to the learned also find delight. The epic stresses that it is the duty of the King (or State) to provide education to the people. Conversely, those who remain uneducated are viewed as lowly, unworthy of respect, and a mere burden to the land of Tamil Nadu. This article explores these diverse perspectives on education as presented in Ravana Kaviyam.

**Keywords:** Ravana Kaviyam, Education, Knowledge, Discipline, Critical Thinking Skills, Permanent Wealth.

**ஆய்வுச்சுருக்கம்**

இராவணகாவியம் பழந்தமிழ் மரபைப் பின்பற்றிய காப்பியம் ஆகும். இராமாயண கதையை அடிப்படையாய் இராவணனைக் காவியத் தலைவனாகக் கொண்டு தமிழர்கள் தம் பண்பாட்டுச் சிறப்பையும் இராவணன் பெருமையும் இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன.மனித வாழ்க்கையில் மிகவும் முதன்மையானது கல்வி. உலகில் வாழக்கூடிய மக்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழ அடிப்படைக் காரணியாக விளங்குவது கல்வி. கல்வி கற்போர்க்கு ஒழுக்கமே அடிப்படைக் கல்வியாக வற்புறுத்தப்பட்டுள்ளது. பொருட் செல்வத்தை விடக் கல்விச் செல்வமே சிறப்புடையது என்றும், முக்காலத்திற்கும் கல்வி சிறந்த துணை என்றும், கல்விச்செல்வம் மட்டும் எப்போதும் குறையாத நிலையான செல்வம் என்றும், கல்வியானது, தானும் இன்புறும், கேட்டவரும் இன்புறும் தன்மை கண்டு இன்புறும் தன்மை உடையது என்றும், மக்களுக்கு கல்வியை அளித்தல் அரசனுக்குக் கடமையாகும் என்றும், கல்வியறிவு பெற்றிராதவர் கடைமக்கள், மதிக்கத்தக்கவன் அல்லன், தமிழகத்திற்கு வெறும் சுமை போன்றவர்கள் என்று இராவணகாவியத்தில் கல்வி சார்ந்த செய்திகள் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள்**

இராவணகாவியம், கல்வி, அறிவு, ஒழுக்கம், சிந்தனை திறன், துணை, நிலையான செல்வம்

**முன்னுரை**

இராவணகாவியம் இராமாயண கதையை அடிப்படையாய், இராவணனைக் காவியத் தலைவனாகக் கொண்டு அமைக்கப்பட்ட நூல் ஆகும். இராவணகாவியத்தின் ஆசிரியர் புலவர் குழந்தை. மனித வாழ்க்கைக்கு அவசியமானது கல்வி. மனிதனை மனிதனாக உருவாக்குவது கல்வியே ஆகும். அறிவு, ஒழுக்கம், பண்பு, சிந்தனை திறன் போன்ற அனைத்தையும் வளர்க்கும் சக்தி கல்விக்கே உண்டு. கல்வியானது ஒரு மனிதனுக்கு சமூகத்தில் அவன் வாழும் காலத்திலும் அதற்கு பின்பு அவனுக்கு புகழ் சேர்க்கக் கூடியதாக விளங்குகிறது. அவ்வகையிலேயே இராவணகாவியத்தில் கல்வி சார்ந்த செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கல்வி – விளக்கம்**

கல்வி என்ற சொல் "கல்"[1] என்ற வேர்ச் சொல்லில் இருந்து வருகின்றது. கல்வி என்னும் சொல்லுக்கு பொருள் கல்லுதல் (தோண்டுதல்). கல் என்னும் அடிச்சொல்லிருந்து கலப்பை என்ற பெயரும், கல்வி என்ற பெயரும் வந்தன. நிலத்தைக் கிளறுவதற்குக் கலப்பை பயன்படுவது போல கல்வி கல்லுதல் என்பது மனத்தைக் கிளறித் திருத்திப் பயன்படுத்துவதாகும். கல்விக்கு அறிவு, கற்றல், நூல், வித்தை, பயிற்சி, உறுதி, ஊதியம், ஏதி, காரணம், கலை, கேள்வி, கால்பு, தேற்சி, விஞ்சை என்று பற்பல பொருட்கள் உள்ளன.

"மனிதனுடைய முழுத்திறமைகளின் வெளிப்பாடே, உண்மையான கல்வி – காந்திஜி"[2]

"பெற்ற பிள்ளை கைவிட்டாலும், கற்ற கல்வி கைவிடாது – போப்[3]" .

"இந்த உலகை மாற்றுவதற்கு உங்களால் பயன்படுத்தக்கூடிய மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் கல்வி - நெல்சன் மண்டேலா"[4]

"எடுத்தால் குறைவது செல்வம், கொடுத்தல் வளர்வது கல்வி – ஜிவெனால் [5]"

என்று கல்வி குறித்து பல அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

**இராவணகாவியத்தில் கல்வி**

கல்வி மனிதன் வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் மரபுகளையும், அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து நவீன இலக்கியங்கள் வரை கல்வியின் முக்கியத்துவம் பல இடங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில், இராவண காவியத்தில் இடம் பெற்றுள்ள கல்வி சார்ந்த செய்திகளை இனி காண்போம்.

**கல்விச் செல்வமே சிறப்பு**

ஒரு மனிதன் தன் வாழ்வில் அவசியம் கொண்டிருக்க வேண்டியது கல்வி.

*"கற்கை நன்றே கற்கை நன்றே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே"*[6]
*(நறுந்தொகை-பாடல்-35)*

என்பது அதிவீரராம பாண்டியனின் வாக்கு. ஒருவன் தன் வாழ்வில் இரந்து நின்றாலும் கல்வி கற்றல் சிறப்பே நமக்கு விளக்குகின்றார்.எனவே, நாம் பொருள் படைத்திருக்காவிடிலும் கல்விச் செல்வம் பெற்றிருக்க வேண்டும் என்று புலப்படுகிறது.

சங்க இலக்கிய பாடல் ஒன்றில் பாண்டியன் நெடுஞ்செழியன் கல்வியின் மேன்மையை, 1. ஒரு ஆசிரியர் கடினமான சூழ்நிலையில் இருக்கும் போது அவருக்கு உதவுவதும், தேவைப்படும் போது அவருக்கு பண உதவி செய்வதும் ஒரு மாணவரின் நற்பண்பு. அவர் ஒருபோதும் ஆசிரியரை அவமதிக்கக்கூடாது. 2. ஒரே தாய்க்குப் பிறந்த சகோதரர்கள் அனைவரிலும், கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் சிறந்து விளங்குபவர் தாயின் தயவுக்கு உரியவர் என்பது உறுதி. 3. அதே குலத்தில், நன்கு படித்தவருக்கு, மூத்தவரை விட அரசர் உயர்ந்த மரியாதை அளிக்கிறார். 4. பல்வேறு சமூக வகுப்பு மக்களிடையே, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் நன்கு படித்தவராக இருந்தால், அவர் உயர் வகுப்பில் பிறந்த அனைவராலும் மதிக்கப்படுவார் என்று பின்வரும் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

*"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,*
*பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!*
*பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,*
*சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;*
*ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்,*
*மூத்தோன் வருக என்னாது, அவருள்*
*அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்,*
*வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,*
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,*
*மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே."*[7]
*( புறநானூறு – 183)*

செல்வம் இல்லாதவர்களுக்கு உலகில் சிறப்பில்லை. செல்வம் சிறப்பது கல்வியால் தான். கல்வி இல்லாதவர் செல்வத்தை மதிப்படைதல் முடியாது.

அதனால், பொருட் செல்வத்தை விடக் கல்விச் செல்வமே சிறப்புடையது என்று பின்வரும் பாடல் உறுதிப்படுத்துகிறது.

*"செல்வ மில்லவர்க் கிவ்வுல கினிற்சிறப் பிலையச்*
*செல்வ மோசிறப் புறுவது கல்வியாற் றெளிவாம்*
*கல்வி யில்லவர் செல்வத்தாற் கணிப்புற லிலையால்*
*கல்வி யேசிறப் பாகுமற் றதனிலுங் காண்பீர்"*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,14)*

என்ற பாடலடிகள் பொருட்செல்வத்தை விடக் கல்விச் செல்வமே சிறப்புடையது என்று கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கின்றது.

**கல்வி – துணை**

மனிதன் உயர்ந்த வாழ்க்கை வாழ கல்வியே உண்மையான துணை.முன்னோர் வகுத்துச் சென்ற நெறிமுறைகளை முறைமையாக ஆராய்ந்து அறிந்த புலவர்கள், குறை இல்லாத வெற்றியைத் தரக்கூடியதாகச் சீர்திருத்தப்பட்ட பழந்தமிழ் நூல்களை தாமே ஆய்ந்து, பொன்னைப் போன்ற உயர்ந்த குணமும் தகுதியும் உடையவர்களாக வாழ விரும்பினால், பலவகையான கல்வி அறிவுகளைத் தவிர வேறு எது துணையாக இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள் எதுவும் இல்லை.

*"முன்னை யோர்நடை முறைகளை முறையொடு புலவர்*
*இன்ன வென்றியாத் திருத்திய பழந்தமி ழியனூல்*
*தன்னை யாய்ந்துபொன் னன்னவர் தகுதியில் வாழப்*
*பன்னு கல்வியல் லாலெவை துணையுறும் பார்க்கின்"*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,19)*

என்ற பாடலில் கல்வி மனிதனைச் சிறந்த தகுதியுடையவனாக மாற்றும் என்று தெளிவு படுத்துகிறது. மேலும்,

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவன்*
*எழுமையும் ஏமாப் புடைத்து"* [8] *(குறள் 398)*

என்ற குறளடி, ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழு பிறப்பிலும் துணையாய் உதவும் தன்மை உடையது என கல்வியே உண்மையான துணை என்று குறிப்பிடுகிறது. மேலும்,

*"ஆவி யன்னமுன் னோர்புரந் தாக்கிய வெழுதா*
*ஓவ மன்னநூ லறிவலான் வேறியா துண்டோ"*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,23)*

என்ற பாடலில், கல்வியை நம் முன்னோர்கள் உயிர் போல காப்பாற்றி ஆக்கிவைத்த எழுதா ஓவியம். கல்வியை தவிர வேறு எதனால் மனிதனை மனிதனாக மாற்ற முடியும். மனிதனை, மனிதனாக மாற்றுவது கல்வியறிவு ஆகும். மேலும்,

*"அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்*
*புறங்கடை நல்இசையும் நாட்டும் – உறுங்கவல்ஒன்று*
*உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்குஇல்லை*
*சிற்றுயிர்க்கு உற்ற துணை. "* [9]

*(நீதிநெறி விளக்கம்.,பா.,1)*

என்ற பாடலில், அறமும் செல்வமும் இன்பமும் என்னும் மூன்று உறுதிப் பொருள்களையும், அவற்றுடன் வீடுபேற்றையும் கல்வியே கொடுக்கும். இத்தகு சிறப்பு வாய்ந்த கல்வியே உயிருக்கு உற்ற துணையாக அமையும். வேறு துணை ஏதும் இல்லை என்கின்றார் குமரகுருபர அடிகள்.மேலும்,

*"சென்ற நின்றவின் றியல்பொருட் செயலினைத் தேர்ந்தே*
*இன்று செய்வன தவிர்வன விவையென வோர்ந்தே*
*நன்று செய்துதீ தொழிந்துமே நலம்பெற வாழ*
*ஒன்று நூலறி வலாலெவை யோதுதற் குரிய".*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,22)*

என்ற பாடலில், இறந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் என்ற முக்காலங்களிலும் பொருள்களின் செயற்பாடுகளை நன்கு ஆராய்ந்து, இன்றைய நாளில் நாம் செய்ய வேண்டியவை எவை, தவிர்க்க வேண்டியவை எவை என்று சிந்தித்து, நல்லவற்றைச் செய்து தீயவற்றை விலக்கி நலமுடன் வாழ்வதற்கு, நூலறிவு ஒன்று மட்டுமேயல்லாமல் வேறு சொல்வதற்கு எவை உள்ளன என்று கல்வி முக்காலத்திற்கும் நலம் தரும் என்கிறார். கல்வியை விட சிறந்த துணை வேறு இல்லை என்பதை மேற்கண்ட பாடல்கள் வழி உணர்த்துகிறது.

**குறைவற்ற செல்வம் கல்வி**

ஒரு மனிதன் அவன் கற்ற கல்வியின் அளவே அவனின் அறிவின் திறமும் அமையும். கல்வி அளவற்ற ஒரு செல்வமாகும். அது அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியைப் போன்று நமக்கான அறிவும் அள்ள அள்ளக் குறையாது பெருகியிருக்கின்றது.

*"கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு"* [10]

*(ஔவை., தனிப்பாடல்.,பா.,38)*

என்ற சொற்றொடர் வழி இவ்வுலகில் நாம் பெறவேண்டிய அறிவு இன்னும் நிறைய நிறைந்திருக்கின்றது.கல்வி அழியாத நிறைந்த செல்வம்.

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்ற யவை"* [11] *(* குறள், 400*)*

என்ற திருவள்ளுவரின் வரிகளில் ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்விதான். அதற்கு வேறு எதுவும் ஈடாகாது என்பது உணர்த்தப்படுகிறது. ஏனைய செல்வங்களை விட சிறப்புடையதாக கல்வி உள்ளது.

நிறைந்த செல்வமானது, அழிந்து குறைந்து போய் இறுதியில் ஒன்றுமில்லாத நிலையிலே தள்ளிவிடும் நிறைய பொருள் செல்வத்தை யாரேனும் கொடுத்தாலும், அது நிலையான நிறைவு அல்ல. என்றும் குறையாமல் இருப்பதாலே கல்வியே குறைவில்லாத உண்மையான செல்வமாகும் இதனை,

*"குறைந்த ழிந்துபோய் வெறுமையிற் குப்புற வீழ்த்தும்*
*நிறைந்த செல்வமுங் கொடுக்கினு நிறைவு லன்றிக்*
*குறைந்தி டாமையாற் கல்வியே குறைவிலாச் செல்வம்*
*அறைந்து போயின ராமென வறிவுநூற் புலவர்".*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,16)*

என்ற பாடலில் பொருள்செல்வம் நிலையற்றது; அது அழிவுக்கு அலைத்துச் செல்லும். ஆனால் கல்விச் செல்வம் மட்டும் எப்போதும் குறையாத நிலையான செல்வம் என்று குறிப்பிட்டுள்ளார்.

**கல்வி பயன்**

மனிதனை உயர்ந்த சிந்தனையுடன் வாழச் செய்யும் சக்தியே கல்வி. "கல்வியின் வேர்கள் கசப்பாவை,கனி இனியது"[12] என்பது கீரிஸ் நாட்டு பழமொழி. கல்வியானது மனிதனுக்கு வளத்தையும், நல்ல வாழ்வையும் தருகிறது.இதனை,

*"மடிமை வாழ்வினை யகன்றுமே செயன்முறை வாய்த்து*
*மிடிமை வாழ்வினை யகன்றுமே பெரும்பொருள் மேவி*
*அடிமை வாழ்வினை யகன்றுமே யுயர்நிலத் தமருங்*
*குடிமை வாழ்வினை யறிவியற் கல்வியே கொடுக்கும்".*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,24)*

என்ற பாடலில் சோம்பலை அகற்றிச் சுறு சுறுப்பையும், வறுமையை நீக்கி வளத்தையும், அடிமை வாழ்வை அகற்றி நல்ல குடிமை வாழ்வையும், கொடுப்பது அறிவு சார்ந்த கல்வியின் பயனாகும். மேலும்,

*"தாம் இன்புறுவது உலகு இன்புற"[13] (குறள்-399)*

என்ற திருவள்ளுவரின் வரிகளில் தமக்கு இன்பம் அடைவதாகிய கல்வியினாலே உலகத்தாரும் இன்பம் அடைவார் என்கின்றார். இந்த கருத்தை பின்வரும் பாடலும் தெளிவுபடுத்துகிறது.

*"தானு மின்புறீஇக் கேட்டவ ரின்புறாஉந் தகைகண்"*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,25)*

என்ற பாடலில் கல்வியானது, தானும் இன்புறும், கேட்டவரும் இன்புறும் தன்மை கண்டு இன்புறும் தன்மை உடையது என்று கல்வியின் பயனைப் போற்றுகிறார்.

**அரசனின் கடமை**

நல்லொழுக்கத்தை அளித்தல் அரசனுக்குக் கடமையாகும் என்பதாகும். நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது அரசரின் முக்கியக் கடமைகளில் ஒன்று. இதனை,

*"தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே"[14]*

*( புறநானூறு பாடல் -312)*

என்ற பாடலடி அரசன் செல்வம் அல்லது அதிகாரம் மட்டுமல்ல, மக்கள் நல்லொழுக்கத்துடன் வாழ வழிகாட்டும் கல்வியையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே கூறுகிறது.

*"இத்த கையமேம் பாடுற வீறறி யாவின்*
*பத்த தாயவொண் கலையையாண் பெண்ணிரு பாலும்*
*ஒத்த தாயராய்க் கற்றறி வுற்றிடச் செய்தல்*
*அத்த கையகாப் புடையர்நீங் காக்கட னாகும்".*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,29)*

என்ற பாடலில் மேன்மையடைய முடிவு இல்லா இன்பத்தைத் தரவல்லது கல்வியாகும். கல்வியை ஆண் - பெண் இருபாலாருக்கும் ஒத்த தன்மையில் கற்று, அறிவு பெற்றிடச் செய்தல் அரசர்களின் நீங்காத கடமையேயாகும் என்று கூறியுள்ளார்.

**கல்வியறிவு அற்றவன் நிலை**

கல்வி என்பது ஒரு மனிதனின் வாழ்வினை நெறிப்படுத்துகிறது. எனவே தான், கிரேக்க அறிஞர் "பிளட்டோ", "கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே மேல். ஏனென்றால், கல்லாமைதான் தீவினையின் மூலவேர்" [15] என்றுரைத்திருக்கின்றார். ஆகவே, இக்கூற்றின் வழி கல்வியே நல்வழிக்கு வழிவகுக்கும் என்று தெரியவருகின்றது. கற்றக் கல்வியை பிழையறக் கற்று அதனை வாழ்க்கையில் ஒழுகுவதே மேன்மை தரும்.

*"கண்உடையவர் என்பவர் கற்றோர்: முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்"[16] (குறள், 393)*

என்ற குறளடியில், கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப்படுபவர் கற்றவரே: கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்கள் உடையவர் ஆவர் என்ற பொருள் ஏற்று வருகின்றது. இதன்வழி, நம்மால் அறியப்படுவது என்னவெனில், கற்றவரே பூரணமானவர், மாறாக கல்லாத பேதையர் கண்களற்ற குருடர்களாய், ஊனமானவர்களாய் விளங்குவர் என்று தெரியவருகின்றது.

*"கற்றி லாதமக் கட்கடை யேதுயர் காலும்".*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,30)*

என்ற பாடலில் கல்வி அறிவு பெற்றிராதவர் கடைமக்களே ஆவர்.

கல்வி கற்காதவர்கள், என்றுமே சமுதாயத்தின் உயர்ந்த நிலையில் அறியப்படமாட்டார். கல்வியறிவு அற்றவன் மதிக்கத்தக்கவன் அல்லன் என்று குறிப்பிட்டுகிறார்.

*"மன்ப தைக்குளோர் மகனென வழைப்பது மதியோ".*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,18)*

என்ற பாடலில் தனது பெயரை எழுதத் தெரியாத கல்வியறிவு அற்றவனை மக்கட் கூட்டத்தில் அவனை மனிதன் என மதிப்பது அறிவுடைமை யாகுமா? என்று கல்வியறிவு அற்றவன் மதிக்கத்தக்கவன் அல்லன் என்று குறிப்பிட்டுள்ளார். பாரதிதாசனே தன் பாடலில்,

*"சொட்டுக் குழம்புக்கும் சோற்றுக்கும் கையில் ஒரு*
*துட்டுக்கும், கண்ணயர்ந்து தூங்குதற்கும் – கட்டத்*
*துணிக்கும் துடிக்கின்ற ஏழையையும் நல்ல*
*பணக்காரன் ஆக்கும் படிப்பு"*[17]

என்று பாடி, கல்வி வாழ்வின் மேன்மைக்கு இட்டு செல்லும் என பாமரனையும் பணிய வைக்கும் வகையில் எளிய தமிழில் உணர்த்தியிருக்கின்றார். படிப்பறிவற்றவனும் தன் வாழ்வில் ஒளி பெற ஒரு உந்துதலாய் திகழும் இப்பாடல், கல்வியற்றவனின் இருளற்ற வாழ்க்கையை நமக்கு கண் முன்னால் கொண்டு வருகின்றது.மேலும்,

*"பொருளு மேவலு மாண்மையும் பொருந்தியே யிருந்தும்*
*தெருளு நூலறி விலாதவர் செயலொடு வாழ்தல்*
*இருளு மப்புமீ ரெழிலியு மிணைந்தவோ ரிரவில்*
*மருளு மூமுநல் வதிருடைக் குருடுசெல் வழக்கே"*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,32)*

என்ற பாடலில் ஒருவனுக்கு செல்வம், ஆற்றல், தகுதி எல்லாம் சிறப்பாக அமைந்திருந்தாலும், தெளிவான ஞான நூலறிவில்லாதவர்கள் தங்கள் அறிவற்ற செயல்களையே வழியாகக் கொண்டு வாழ்க்கை நடத்துவது, இருளும்,மழை மேகமும் ஒன்று கலந்த ஓர் இரவுப் பொழுதில், மயக்க வுணர்வுடைய ஊமைத் தன்மையும், செவிட்டுத்தன்மையும் உடைய ஒரு குருடன் செல்லும் முறைமையினைப் போன்றதாகும். ஞானம் இல்லையெனில் வாழ்க்கை வழி குழப்பமாகி, அது குருட்டுத்தனமான பயணமாக மாறிவிடும்.கல்வியே அனைத்திற்கும் அடிப்படையாகும் என்று உணரலாம். மேலும்,

*"நாற்பால் குலத்தின் மேற்பா லொருவன்*
*கற்றிலனாயின் கீழிரு ப்பவனே"*[18]

*(நறுந்தொகை.,பா.,37)*

என உயர்ந்த குலத்திற் பிறந்தவனாயினும் கல்லாதவனாயின் தாழ்ந்தவனே என்று கல்லாமையின் விளைப்பயனை எடுத்து இயம்புகின்றது.

*"சொல்லி னின்பமுஞ் சொற்பொரு ளின்பமுஞ் சொல்லிற்*
*செல்லு சொன்னடை யின்பமுஞ் செறிந்தசொற் பொருளைக்*
*கல்லி யின்புறுங் கருத்தின தின்பமு மொருங்கே*
*புல்லி யின்புறாத் தற்குறி தமிழகப் பொறையே".*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,20)*

என்ற பாடலில் சொல்லின் இன்பம், சொற் பொருளின் இன்பம், சொல்லிலே இயலும் நடை இன்பம் ஆகியவை செறிந்த சொல்லையும் பொருளையும், ஆழ்ந்து தோண்டி இன்பம் தரும் கருத்தையும் ஒருங்கே பொருத்தி இன்பமடையாத கல்வியறிவற்றவன் தமிழகத்திற்கு வெறும் சுமையே ஆவான் என்று குறிப்பிட்டுள்ளார்.

*"கண்ணி ரண்டென்ப வெண்ணையு மெழுத்தையும் கற்றோர்*
*எண்ணெ முத்துளா ரறிவுக்க ணொன்றுட னேமுக்*
*கண்ண ராகியே மக்களின் றலைமையைக் காண்பர்*
*எண்ணெ முத்தறி விலாரையெவ் வினத்தினிற் சேர்ப்பாம்".*

*(இராவண காவியம்., அரசியற் படலம்.,பா.,34)*

என்ற பாடலில் எண்ணையும் எழுத்தையும் கற்றறிந்தோர் இரு கண்களே கண்கள் என்று கூறுவர். எண்ணும் எழுத்தும் உள்ளவர் அவற்றோடு அறிவுக் கண்ணையும் சேர்த்து முக்கண்கள் உடையவராவர். அப்படிப்பட்ட இயல்புடையவரே மக்களின் தலைமைப் பொறுப்பிலே காணப்பட்டுச் சிறப்புறுவர். எண்ணும் எழுத்தும் இல்லாதவரை எந்த இனத்தில் நாம் சேர்ப்போம். அவர்கள் எந்த இனத்திலும் சேர்க்க இயலாதவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

- கல்வி மனித வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளியாகும். கல்வி இல்லாத வாழ்க்கை திசை தெரியாத பயணம் போன்றது.
- பொருட் செல்வத்தை விடக் கல்விச் செல்வமே சிறப்புடையது.
- முக்காலத்திற்கும் கல்வி சிறந்த துணை மற்றும் எப்போதும் குறையாத நிலையான நிறை செல்வம்.
- கல்வியானது, தானும் இன்புறும், கேட்டவரும் இன்புறும் தன்மை கண்டு இன்புறும் தன்மை உடையது.
- மக்களுக்கு கல்வியை அளித்தல் அரசனுக்குக் கடமையாகும்.
- கல்வியறிவு பெற்றிராதவர் கடைமக்கள், மதிக்கத்தக்கவன் அல்லன், தமிழகத்திற்கு வெறும் சுமை போன்றவர்கள் என்கின்றார்.

அவ்வகையிலேயே இராவணகாவியத்தில் கல்வி சார்ந்த செய்திகளை பற்றி இந்த கட்டுரை வழி அறிய முடிகின்றன.

**அடிக்குறிப்பு**

1. இராமகிருட்டிணன்.சு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி,பக்., 504.
2. த.கோவேந்தன், கல்விச் செல்வம், பக்.,49
3. த.கோவேந்தன், கல்விச் செல்வம், பக்.,52
4. த.கோவேந்தன், கல்விச் செல்வம், பக்.,54
5. த.கோவேந்தன், கல்விச் செல்வம், பக்.,51
6. மு.வேங்கடசாமி நாட்டார், நீதி நூல்கள்,பக்.,120.
7. முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், முனைவர் அ. விசுவநாதன், முனைவர் வி.நாகராசன், முனைவர் இரா. ஆரோக்கியசாமி, முனைவர் க. திலகவதி, முனைவர் வெ. சத்தியநாராயணன்., புறநானூறு மூலமும் உரையும்.,பக்.,445.
8. புலியூர்க்கேசிகன், திருக்குறள்- பரிமேலழகர் உரை.,பக்.,188.
9. முனைவர் பழ. முத்தப்பன், நீதிநெறி விளக்கம்- மூலமும் உரையும்,பக்.,1.
10. ஔவையார், தனிப்பாடல்.,பக்.,56.
11. புலியூர்க்கேசிகன், திருக்குறள்- பரிமேலழகர் உரை.,பக்.,322.
12. த.கோவேந்தன், கல்விச் செல்வம், பக்.,57
13. புலியூர்க்கேசிகன், திருக்குறள்- பரிமேலழகர் உரை.,பக்.,188.
14. முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், முனைவர் அ. விசுவநாதன், முனைவர் வி.நாகராசன், முனைவர் இரா. ஆரோக்கியசாமி, முனைவர் க. திலகவதி, முனைவர் வெ. சத்திய நாராயணன்., புறநானூறு மூலமும் உரையும்.,பக்.,312.
15. த.கோவேந்தன், கல்விச் செல்வம், பக்.,53
16. புலியூர்க்கேசிகன், திருக்குறள்- பரிமேலழகர் உரை.,பக்.,186.
17. த.கோவேந்தன், கல்விச் செல்வம், பக்.,38
18. மு.வேங்கடசாமி நாட்டார், நீதி நூல்கள்,பக்.,120.

**துணைநூற்பட்டியல்**


1. இராமகிருட்டிணன். சு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி : (க) இரண்டாம் மடலம் - முதற்பாகம் - Vol. 2 - Part. 1, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், சென்னை, 2000.
2. கோவேந்தன் .த, கல்விச்செல்வம், வண்ணக் களஞ்சியம், 165, லாயிட்சு சாலை, சென்னை – 600014, முதற் பதிப்பு - சனவரி 1976.
3. பாலசுப்பிரமணியன். கு.வெ, விசுவநாதன். அ, நாகராசன். வி, ஆரோக்கியசாமி. இரா, திலகவதி.க, சத்திய நாராயணன்.வெ, புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 698, முதற்பதிப்பு-2004.
4. புலியூர்க்கேசிகன் உரை, எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, 2020.
5. புலியூர்க் கேசிகன் உரை, ஔவையார்-தனிப்பாடல், மங்கை வெளியீடு B 6, திருவேணி அடுக்ககம், ஆழ்வார்ப்பேட்டை, சென்னை – 18, முதற் பதிப்பு- டிசம்பர் 2010.
6. புலியூர்க் கேசிகன் உரை, திருக்குறள்- பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், பிரகாசம் சாலை (பிராட்வே) ,சென்னை-600 108.
7. மணிமாறன்,திருக்குறள் இனிய தெளிவுரை, சாரதா பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு-2005.
8. முத்தப்பன், நீதிநெறி விளக்கம்- மூலமும் உரையும், உமா பதிப்பகம்,18-171, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை – 600 001.
9. வெற்றியழகன்.ந, புலவர் குழந்தையின் இராவணகாவியம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
10. வேங்கடசாமி நாட்டார்.ந.மு, நீதி நூல்கள், தமிழ் வளர்ச்சி இயக்ககம், எழும்பூர்,சென்னை- 600 008, முதற்பதிப்பு-2017.